Royal College of Anaesthetists

# உணர்ச்சி உள்ளடக்கம் விவரிக்கப்படுகிறது

உணர்ச்சி உள்ளடக்கம் என்றால் என்ன, அது எப்படி வேலை செய்கிறது மற்றும் அது எப்போது உங்களுக்குத் தேவைப்படலாம் என்பதை இந்தத் துண்டுப்பிரசுரம் விளக்குகிறது. உணர்ச்சி உள்ளடக்கத்தைப் பயன்படுத்துவதன் நன்மைகள், மற்றும் ஆபத்துகளையும், அது எப்படி உணர வைக்கக்கூடும் என்பதையும்கூட இது விளக்குகிறது.

முக்கியமாக, உணர்ச்சி உள்ளடக்கத்திற்குப் பின்னர் உங்கள் கவனிப்பிற்கு நீங்கள் எதைத் திட்டமிடவேண்டும் என்பதை இது உங்களுக்குச் சொல்கிறது.

நோயாளிகள், நோயாளிகளுடையப் பிரதிநிதிகள் மற்றும் மயக்கமருந்து நிபுணர்கள் கூடி பணி செய்து இதை எழுதி இருக்கிறார்கள்.

உணர்ச்சி உள்ளடக்கம் என்பது வழக்கமாக உங்கள் இரத்தக் குழாய்க்குள் (IV அல்லது நரம்பு வழியாகக் செலுத்தப்படுவது) கொடுக்கப்படுகிறது, ஆனால், சில நேரங்களில் இதை வாய்மூலமாக (வாயின் வழியாக) அல்லது ஒரு முகமூடியின் வழியாகவும் கொடுக்கலாம்.

## நரம்பு வழியாகச் செலுத்தப்படும் உணர்ச்சி உள்ளடக்கம் என்றால் என்ன?

நரம்பு வழி உணர்ச்சி உள்ளடக்கத்தின் போது, உங்களைத் தளர்வாக்குவதற்காக உணர்ச்சி உள்ளடக்கும் ஒரு உணர்ச்சி அடக்கி (உணர்ச்சி அகற்றும் மருந்து) உங்களுடைய ரத்த ஓட்டத்தில் (ரத்தக் குழாயில்) ஊசிமூலம் ஒரு சொட்டு மருந்துக் குழாய் (குழல்) வழியாக செலுத்தப்படுவது.

இதைச் செய்கிற உடல்நலப் பராமரிப்புத் தொழில் வல்லுனருக்கு அளிக்கப்பட்டிருக்கும் பெயர், 'உணர்ச்சி உள்ளடக்குனர்'.

சரியான அளவில் உணர்ச்சி உள்ளடக்க மருந்தை கொடுப்பது, மற்றும் எந்தவொரு பக்க விளைவையும் கையாள்வது ஆகியவற்றில் இவர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். அறுவைச் சிகிச்சை அரங்கில், மயக்கமருந்து நிபுணர், வழக்கமாக, ஒரு உணர்ச்சி உள்ளடக்குனராக இருப்பார். பிற அமைப்புகளில், இது ஒரு செவிலியர், அறுவைச் சிகிச்சை மருத்துவர் அல்லது பிற பயிற்சி பெற்ற மருத்துவராக இருக்கலாம். உங்களுடைய சிகிச்சையின் போது, உங்கள் உணர்ச்சி உள்ளடக்குனர் முழு நேரமும் உங்களுடன் இருப்பார்.

நரம்பு வழியாகச் செலுத்தப்படும் உணர்சி உள்ளடக்கத்தில், மூன்று வெவ்வேறு நிலைகள் உள்ளன. அவை 'குறைந்தபட்ச', 'நடுத்தர அளவு' (சில நேரங்களில் விழிப்புணர்வுடனான உணர்ச்சி உள்ளடக்கம் என்றும் அழைக்கப்படுகிறது) மற்றும் 'ஆழமான' உணர்ச்சி உள்ளடக்கம் என்று அழைக்கப்படுகின்றன.

- **குறைந்தபட்ச உணர்ச்சி உள்ளடக்கம்** – உணர்ச்சி உள்ளடக்குனர் உங்களுக்கு ஒரு சிறிய அளவு உணர்ச்சி உள்ளடக்க மருந்தை அளிப்பார். நீங்கள் தளர்வாக உணர்வீர்கள், உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப்பற்றிக் கவலைப்பட மாட்டீர்கள், ஆனால், நீங்கள் விழிப்போடு

இருப்பீர்கள், மேலும் உங்களால் இயல்பாகப் பேச இயலும். உங்களுக்குச் சிகிச்சை நடந்தது உங்கள் நினைவில் இருக்கக்கூடும், ஆனால், அதன் எல்லா விவரங்களும் உங்கள் நினைவில் இருக்காது. குறைந்தபட்ச உணர்ச்சி உள்ளடக்கம் உங்கள் சுவாசிப்பைப் பாதிக்கக்கூடாது.

- **நடுத்தர அளவு உணர்ச்சி உள்ளடக்கம் (விழிப்புணர்வுள்ள உணர்ச்சி உள்ளடக்கம்)** – நீங்கள் மிகத் தளர்வாகவும் தூக்கக் கலக்கமாகவும் உணர்வதற்காக, உணர்ச்சி உள்ளடக்குனர் உங்களுக்குச் சற்றுக் கூடுதல் அளவு உணர்ச்சி உள்ளடக்க மருந்து (களை) அளிப்பார். முக்கியமாக, இந்த நேரத்திலும் உங்கள் உணர்ச்சி உள்ளடக்குனரால் உங்களுடன் பேச இயலும், மேலும் உங்களால் எளிய வழிமுறைகளைப் பின்பற்ற இயலும். உங்கள் சிகிச்சையின் சில பகுதிகள் உங்களுக்கு நினைவில் இருக்கலாம். நடுத்தர அளவு உணர்ச்சி உள்ளடக்கம் உங்கள் சுவாசிப்பைப் பாதிக்கக்கூடாது.
- **ஆழமான உணர்ச்சி உள்ளடக்கம்** – உணர்ச்சி உள்ளடக்குனர் உங்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மருந்துகளை இன்னும் கூடுதலான அளவில் கொடுப்பார், உங்கள் சிகிச்சையின் பெரும்பகுதி நேரத்துக்கு இவை உங்களைத் தூங்கவைக்கும். உங்கள் சிகிச்சையின்போது உங்களுடன் பேசமுடியும் என்று உங்கள் மருத்துவர் எதிர்பார்க்க மாட்டார். உங்கள் சுவாசிப்புப் பாதிக்கப்படலாம், மேலும் உங்கள் உணர்ச்சி உள்ளடக்குனர் உங்களை கவனித்து, தேவைப்பட்டால் உங்களுக்கு உதவுவார். சில நேரங்களில், உங்கள் சிகிச்சையின் ஒரு பகுதி உங்களுக்கு நினைவிருக்கலாம். UK-யில், மயக்கமருந்து நிபுணர் நிலை அளவிற்குப் பயிற்சி மற்றும் திறன் பெற்ற ஊழியர்கள் தான், ஆழமான உணர்ச்சி உள்ளடக்கத்தைச் செயற்படுத்த வேண்டும்.

## வாய் வழியாக அளிக்கப்படும் உணர்ச்சி உள்ளடக்கம் என்றால் என்ன?

சில நேரங்களில், பொது உணர்ச்சிநீக்கிக்கு முன்னால் மிகவும் பதற்றமாக இருக்கும் மக்களைத் தளர்வாக்குவதற்கு இது பயன்படலாம், ஆனால், இதை மட்டுமே கொண்டு சிகிச்சையின்போது உங்களைத் தளர்வாக்க இயலாது. இது வேலை செய்வதற்குச் சிறிது நேரமாகிறது, மேலும், இதன் அளவு மனிதருக்கு மனிதர் வேறுபடும் என்பதால், சரியான மருந்தளவைப் பெறுவது சிரமமாக இருக்கலாம்.

**நீங்கள் உங்களுடைய ஒப்புதல் படிவத்தில் ஏற்கெனவே கையெழுத்திட்டிருந்தாலே தவிர, நீங்கள் மருத்துவமனைக்கு வருவதற்குமுன்னால் நீங்கள் உட்கொள்ளக்கூடிய வாய் வழி உணர்ச்சி உள்ளடக்க மருந்துகளைப் பரிந்துரைக்கும்படி உங்கள் பொது மருத்துவரை தயவுசெய்து கேட்காதீர்கள், ஏனெனில், இது உங்களுடைய சிந்தனை மற்றும் பகுத்துணர்வு பண்பைப் பாதிக்கலாம்.**

நீங்கள் உங்களுடைய மருத்துவரைச் சந்திக்கும்போது உங்களால் தெளிவாகச் சிந்திக்க முடிவது முக்கியம், அப்போதுதான் நீங்கள் ஆபத்துகளைப்பற்றி விவாதிக்க வும், மற்றும் அறுவைச் சிகிச்சை அல்லது செயல்முறைக்கு உட்படுவதற்கு ஒப்புக்கொள்வதாகத் தெரிவிக்கும் ஒரு படிவத்தில் கையெழுத்திட முடியும்.

## உணர்ச்சி உள்ளடக்கம் மற்றும் பொது உணர்ச்சிநீக்கிக்கு இடையில் உள்ள வித்தியாசங்கள் என்னென்ன?

உணர்ச்சி உள்ளடக்கம் மற்றும் பொது உணர்ச்சி நீக்கிக்கு இடையில் உள்ள வித்தியாசங்கள் பின்வருமாறு:

- உங்கள் உணர்வின் நிலை
- உங்கள் சுவாசிப்பை ஆதரிக்க உதவக்கூடிய கருவியின் தேவை
- சாத்தியமான பக்க விளைவுகள்.

குறைந்தபட்ச மற்றும் நடுத்தர அளவு உணர்ச்சி உள்ளடக்கம், உங்களை மயக்கமாக, இதமாக, தூக்கக்கலக்கமாக, மற்றும் தளர்வாக உணரச்செய்யும், ஆனால், சிகிச்சையின்போது முழு நேரமும் நீங்கள் விழிப்புணர்ச்சியுடன் இருப்பீர்கள்.

பொது உணர்ச்சிநீக்கியின் போது, நீங்கள் முழுமையாகவே பதில் அளிப்பதில்லை, மேலும், செயல்முறையின்போது நினைவிழந்து இருப்பீர்கள்.

ஆழமான உணர்ச்சி உள்ளடக்கம் என்பது இந்த இரண்டுக்கும் நடுவில் இருப்பதாகும்.

## நரம்பு வழியாக செய்யப்படும் உணர்சி உள்ளடக்கத்தின் கீழ் எந்தெந்தச் சிகிச்சைகளைச் செய்யலாம்?

நரம்பு வழியாகச் செய்யப்படும் உணர்ச்சி உள்ளடக்கத்தின் போது, பல சிறிய சிகிச்சைகளை மேற்கொள்ளலாம். பின்வருபவை, சில எடுத்துக்காட்டுகளை உள்ளடக்கும்:

- தோல் அல்லது மார்பக திசுப் பரிசோதனைகள்
- உடைந்த எலும்புகளுக்கான சிறிதளவு பழுது பார்ப்பு
- தோல், கை அல்லது காலில் சிறிய அறுவைச் சிகிச்சை
- வயிறு (எண்டோஸ்கோபி), நுரையீரல் (பிரான்கோஸ்கோபி), பெருங்குடல் (கோலனோஸ்கோபி) அல்லது சிறுநீர்ப்பை (சிஸ்டோஸ்கோபி) தொடர்புடைய பிரச்சனைகளைக் கண்டறிய உதவும் செயல்முறைகள்
- பற்களைப் பிடுங்குதல் அல்லது வேறு பல் சிகிச்சைகள்
- கண் புரை அகற்றல் போன்ற கண் அறுவைச் சிகிச்சைகள்.

## நரம்பு வழியாகச் செய்யப்படும் உணர்ச்சி உள்ளடக்கத்தின் நன்மைகள் என்னென்ன?

- இது விரைவாகச் செயல்படுகிறது, மேலும், உங்களுக்கு மிகச்சரியான அளவு மட்டும் கிடைக்கும்படி மருந்தின் அளவைச் சரி செய்யலாம்.
- உங்கள் சிகிச்சையின்போது நீங்கள் அதிக தளர்வுடன் இருக்க இது உங்களை அனுமதிக்கிறது. இதன் இன்னொரு பொருள், உங்கள் சிகிச்சைக்குப்பிறகு, நீங்கள் அதைப்பற்றி மிகக் குறைவாகவே நினைவில் வைத்திருப்பீர்கள்.
- சில மருத்துவப் பிரச்சனைகளைக் கொண்ட நோயாளிகளுக்குப் பொது உணர்ச்சிநீக்கி பொருந்தாமலிருக்கலாம், அதுபோன்ற நேரங்களில் சில செயல்முறைகளுக்குப் பொது உணர்ச்சிநீக்கியின் தேவையைத் தவிர்ப்பதற்கு இது பயன்படுகிறது.
- சாதாரணமாக, பொது உணர்ச்சிநீக்கியுடன் ஒப்பிடும்போது இதில் பக்க விளைவுகள் குறைவு.
- பொது உணர்ச்சிநீக்கிக்குப் பின் அதிலிருந்து மீட்டெழுவதை விட, இதிலிருந்து மீட்டெழுவது விரைவாக இருக்கும், ஆகவே, பொதுவாக உங்கள் சிகிச்சைக்குப்பின் ஒரு மணி நேரத்துக்குள் நீங்கள் நன்றாக இருப்பதாக உணர்ந்தால், நீங்கள் வீட்டுக்குச் செல்லலாம்.

## நரம்பு வழியாகச் செலுத்தப்படும் உணர்ச்சி உள்ளடக்கத்தின் ஆபத்துகள் என்னென்ன?

- உங்கள் சுவாசிக்கும் விகிதம் மெதுவாகலாம். ஆழமான உணர்ச்சி உள்ளடக்கத்தில் இது பொதுவானதுதான், ஆனால், எப்போதெல்லாம் உணர்ச்சி உள்ளடக்கம் பயன்படுத்தப்படுகிறதோ, அப்போது இந்த ஆபத்து உள்ளது. உணர்ச்சி உள்ளடக்குனர் உங்களைக் கண்காணிப்பதில் திறமை கொண்டவர், தேவைப்பட்டால், நீங்கள் சுவாசிப்பதற்கு அவரால் உதவ முடியும்.

- உங்கள் இரத்த அழுத்தம் குறைவது வழக்கமானதுதான், ஆனால், இதற்கும் சிகிச்சை அளிப்பதற்கு உணர்ச்சி உள்ளடக்குனர் பயிற்சியைப் பெற்றுள்ளார்.
- உடல் நலம் சரியில்லாததுபோல் உணர்வது அல்லது வாந்தி எடுப்பது நிகழலாம், ஆனால், இவை பொதுவாக இருப்பதில்லை.
- உணர்ச்சி உள்ளடக்கும் மருந்துகளுக்கு ஒவ்வாமை எதிர்வினைகள் நிகழ்வது மிகவும் அரிதாகும்.
- கானுலா வைக்கப்பட்ட அல்லது வைக்க முயலப்பட்ட இடத்தில் உங்களுக்கு சிறு சிராய்ப்பு ஏற்படலாம்.
- அதன்பிறகு நீங்கள் உங்கள் காலில் நிற்பதற்கு சற்று நிலையற்று உணரலாம், மேலும் குறிப்பாக, நீங்கள் முதியவராக இருந்தால், நீங்கள் விழக்கூடிய ஆபத்து மிகுதியாகலாம்.
- உணர்ச்சி உள்ளடக்கம், 24 மணி நேரம்வரை உங்கள் பகுத்தறியும் பண்பு மற்றும் நினைவாற்றலைப் பாதிக்கலாம்.

## உணர்ச்சி உள்ளடக்கத்திற்கான மாற்றுகள் என்னென்ன?

- **ஒரு பொது உணர்ச்சிநீக்கி:** சிகிச்சையின்போது நீங்கள் முற்றிலும் நினைவிழந்திருப்பீர்கள், மேலும் செயல்முறையைப் பற்றி எந்த நினைவையும் கொண்டிருக்க மாட்டீர்கள்.
- **எந்த உணர்ச்சி உள்ளடக்கமும் இல்லாமல் ஓரிட உணர்ச்சிநீக்கி:** உங்கள் சிகிச்சையின்போது நீங்கள் முற்றிலும் விழிப்புடன் இருப்பீர்கள், ஆனால், சௌகரியமாக உணர்வீர்கள். நீங்கள் செயல்முறையைக் காண்பதைத் தடுப்பதற்காக, ஒரு திரை வைக்கலாம்.

## நான் உணர்ச்சி உள்ளடக்கம் எடுத்துக் கொள்ளலாமா என்பதை யார் தீர்மானிக்கிறார்கள்?

மதிப்பீட்டு சமயத்தில், உணர்ச்சி உள்ளடக்கம் விருப்பத்தேர்வு செய்வது பற்றி உங்கள் மருத்துவர் அல்லது செவிலியரிடம் நீங்கள் விவாதிக்கலாம். அது வழங்கப்படவில்லை என்றால், அதைப் பெறுவது சாத்தியமா என்று நீங்கள் தாராளமாகக் கேட்கலாம்.

ஏற்கெனவே உள்ள மருத்துவ நிலைகளால் உங்களுக்குக் கூடுதல் ஆபத்து உள்ளது என்றால், உங்கள் மருத்துவர்கள் இருக்கும் விருப்பத்தேர்வுகளை உங்களுடன் கலந்தாலோசிப்பார்கள், நீங்கள் ஒன்று சேர்ந்து ஒரு முடிவிற்கு வரலாம்.

## நான் உணர்ச்சி உள்ளடக்கம் செய்துகொள்வதற்காக, மருத்துவமனைக்கு வருவதற்குமுன்னால் நான் என்ன செய்யவேண்டும்?

- நீங்கள் பார்த்துக் கொள்ளுகிற மக்கள் இருந்தால், எடுத்துக்காட்டாக, குழந்தைகள் அல்லது முதியவர்கள், அடுத்த நாள்வரை வேறு யாராவது அவர்களைக் கவனித்துக்கொள்ளும்படி நீங்கள் திட்டமிட வேண்டியிருக்கும்.
- உங்களைத் தகுதியுடைய வயது வந்த ஒருவர், வீட்டுக்கு கார் அல்லது வாடகைக் காரில் அழைத்துச் செல்லவேண்டும் - பொதுப் போக்குவரத்தில் செல்வது தக்கது அல்ல. உணர்ச்சி உள்ளடக்கத்தின் தாக்கங்கள் 24 மணிநேரங்கள் வரை நீடிக்கலாம் என்பதால், அவர்கள் உங்களைக் கவனித்துக் கொள்வதற்காக முழு இரவும் உங்களுடன் தங்கவேண்டும்.
- உங்களுடைய மருந்துகள் அனைத்தையும்- நீங்கள் உறிஞ்சிகள் ஏதாவது பயன்படுத்தினால், அவற்றையும் சேர்த்து - மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுங்கள்.

- உங்களுக்கு ஒரு நோய் இருந்தால், சளி பிடித்திருந்தால், அல்லது, நீங்கள் கர்ப்பமாக இருந்தால், உணர்ச்சி உள்ளடக்கம் மேற்கொள்வது பாதுகாப்பாக இல்லாமலிருக்கலாம். அதுபோன்ற நேரங்களில், தயவுசெய்து உங்கள் மருத்துவமனையுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் சிகிச்சையை மாற்றியமைக்க வேண்டியிருக்கலாம்.
- செயல்முறை நாளன்று, நீங்கள் தாய்ப்பால் கொடுக்கிறீர்களா என்று உங்கள் மருத்துவருக்குத் தெரிவியுங்கள்.
- மருத்துவமனைக்கு வருவதற்குமுன்னால், அனைத்து ஒப்பனைகளையும் -நகப் பூச்சு மற்றும் நகைகளையும் சேர்த்து- நீக்கிவிடுங்கள். நீங்கள் திருமணப் பட்டையை அணியலாம்.
- சில தளர்வாக இருக்கிற ஆடைகளைக் கொண்டுவாருங்கள், எடுத்துக்காட்டாக, உங்களை சௌகரியமாகவும், கதகதப்பாகவும் வைத்துக் கொள்வதற்காக, ஒருடிரெஸ்ஸிங் அங்கி அல்லது ஒரு கம்பளியாட்டு மயிரினால் ஆன உடை போன்றவற்றைக் கொண்டுவாருங்கள். எளிதில் அணியக்கூடிய தட்டையான காலணிகளை அணிந்துகொள்ளுங்கள்.

## என் சிகிச்சை ஆரம்பிப்பதற்கு முன்பு, நான் சாப்பிடலாமா? பானம் பருகலாமா?

எப்போது சாப்பிடுவதை, பானம் பருகுவதை நிறுத்தவேண்டும் என்பதுபற்றி உங்கள் மருந்தகம் அல்லது மருத்துவமனை உங்களுக்கு அறிவுறுத்தல்கள் அளிக்கும்.

பொதுவாக, உங்கள் சிகிச்சைக்கு ஆறு மணி நேரம் முன்பாக நீங்கள் சாப்பிடுவதை நிறுத்திவிடும்படி கேட்டுக்கொள்ளப் படுவீர்கள், ஆனால், உங்கள் சிகிச்சைக்கு இரண்டு மணி நேரம் முன்புவரை நீங்கள் தெளிவான திரவங்களைப் பருகலாம். நீங்கள் பருக அனுமதிக்கப்படும் தெளிவான திரவங்களில் சில: தண்ணீர், நீர்த்த சாறு (அதில் பழத் துண்டுகள்

இருக்கக்கூடாது) மற்றும் வெறும் தேநீர் அல்லது காஃபி (இவற்றில் பால் அல்லது ஏடு சேர்க்கக்கூடாது).

உங்களுக்கு நீரிழிவு இருந்தால், நீங்கள் எப்போது உங்களுடைய மருந்துகளை எடுத்துக்கொள்ளவேண்டும், உணவு உண்ணுவதை எப்போது நிறுத்தவேண்டும் என்பது பற்றி குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை நீங்கள் கேட்க வேண்டும்.

## என் சிகிச்சைக்கு முன்னால் என்ன நடக்கும்?

வழக்கமாக, நீங்கள் ஒரு அங்கியை மாற்றிக் கொள்வீர்கள். நீங்கள் செயல்முறை அறைக்குச் சென்றவுடன், உங்கள் உணர்ச்சி உள்ளடக்குனர், சில கண்காணிக்கும் கருவிகளை உங்களுடன் இணைப்பார். உங்களுக்குச் செய்யப்படும் செயல்முறை மற்றும் நீங்கள் பெறும் உணர்ச்சி உள்ளடக்கத்தின் வகை என்ன என்பதைப் பொறுத்து, பயன்படுத்தும் கருவிகள் மாறுபடும். ஆனால், பொதுவாகப் பின்வரும் கருவிகள் பயன்படுத்தப்படும்:

- உங்கள் புஜத்தில் இரத்த அழுத்தத்தை அளவிட உதவும் ஒரு சுற்றுப்பட்டை
- உங்கள் இதயத் துடிப்பின் ஒழுங்கைப் பதிவு செய்வதற்காக, உங்கள் மேல்மார்பில் சில மின் தந்திகள்
- உங்களுடைய ஆக்ஸிஜன் அளவை அளப்பதற்காக, உங்கள் விரலில் ஒரு கவ்வி (கிளிப்)
- நீங்கள் மூச்சு வெளிவிடும்போது அதிலுள்ள கார்பன்-டை-ஆக்ஸைடின் அளவை அளவிடுகிற ஒரு மெல்லிய பிளாஸ்டிக் குழாய். இது பொதுவாக ஓர் ஆக்ஸிஜன் முகமூடியுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

## நரம்பு வழியாகச் செலுத்தப்படும் உணர்ச்சி உள்ளடக்கம் எப்படி கொடுக்கப்படுகிறது?

- உங்கள் புஜத்தில் அல்லது உங்கள் கையின் பின் பகுதியில் உள்ள ஒரு நரம்பில் பொருத்தப்பட்டுள்ள ஒரு சொட்டு மருந்துக் குழாய் (கானுலா) வழியாக, உணர்ச்சி உள்ளடக்கம் அளிக்கப்படுகிறது. செயல்முறையின்போது உங்கள் தேவைக்கேற்ப கூடுதலாகக் கொடுக்கப்படலாம். ஆழமான உணர்ச்சி உள்ளடக்கத்தின் போது, வழக்கமாக உங்கள் நரம்பில் ஒரு மருந்து தொடர்ந்து கொடுக்கப்படுகிறது.
- பொதுவாக, நீங்கள் மூச்சுவிடுவதற்காக ஆக்ஸிஜன் உங்கள் மூக்கின் உட்பகுதியில் வைக்கப்பட்டுள்ள ஒரு பிளாஸ்டிக் குழாய் அல்லது ஒரு முகமூடியின் வழியாக வழங்கப்படுகிறது.

## உணர்ச்சி உள்ளடக்கம் என்பது எப்படி இருக்கும்?

அவரவர்களுக்கு எவ்வளவு மருந்து கொடுக்கப் படுகிறது என்பதைப் பொறுத்து இந்த அனுபவம் ஒவ்வொருவருக்கும் மாறுபடும். ஆழமான உணர்ச்சி உள்ளடக்கத்தில் நீங்கள் தூங்கிக்கொண்டிருப்பீர்கள், ஆனால், லேசான உணர்ச்சி உள்ளடக்கத்தில் நீங்கள் பொதுவாக ஒரு மகிழ்ச்சியான தளர்வு நிலையை உணர்வீர்கள்.

எப்படி இருந்தது என்று நாங்கள் சில நோயாளிகளைக் கேட்டபோது, அவர்கள் தெரிவித்த சில பதில்கள் கீழ்கண்டவாறு:

*'நான் மிகவும் இடைவெளி உள்ளது போலும் மேலும் கனவுபோலும் உணர்ந்தேன்'*

*'சிகிச்சை நேரம் முழுவதும் நான் விழித்திருந்ததாகத் தான் நான் நினைத்தேன்; ஆனால், அவ்வப்போது நான் தூங்கியிருக்கவேண்டும், ஏனெனில், அது திடீரென்று ஒரு மணி நேரத்திற்குப் பிறகாக இருந்தது'*

*' நிஜமாகவே நான் மிகவும் இறுக்கமில்லாமலும் மகிழ்ச்சியாகவும் உணர்ந்தேன்'*

*'அது விசித்திரமாக இருந்தது, என்னைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து நான் மிகவும் விலகியிருப்பதாக உணர்ந்தேன்.'*

## நான் எப்போது வீட்டுக்குப் போகலாம்?

- நீங்கள் லேசான அல்லது மிதமான உணர்ச்சி உள்ளடக்கத்தைப் பெற்றால், பொதுவாக, உங்கள் சிகிச்சை முடிந்து ஒரு மணி நேரத்துக்குள் நீங்கள் வீட்டிற்குச் செல்லலாம்.
- நீங்கள் ஆழமான உணர்ச்சி உள்ளடக்கத்தைப் பெற்றால், உங்கள் மீட்டெழுப்பு ஒன்று முதல் இரண்டு மணி நேரம் எடுக்கக்கூடும். செயல்முறையிலிருந்து நீங்கள் மீட்டெழுவதைப் பொறுத்து அனேகமாக நீங்கள் வீட்டிற்குச் செல்லும் நேரம் மாறலாம்.

## அதன்பிறகு பின்பற்றவேண்டிய முக்கியமான அறிவுறுத்தல்கள் ஏதேனும் உண்டா?

- முன்பே குறிப்பிட்டதுபோல், வயது வந்த திறனுள்ள ஒருவர் காரில் அல்லது வாடகைக் காரில் உங்களை வீட்டுக்கு அழைத்துச்செல்லவேண்டும் - பொதுப் போக்குவரத்து உகந்ததில்லை- அவர் உங்களுடன் இரவு முழுவதும் இருக்கவேண்டும். சிகிச்சைக்குப்பிறகு யாராவது உங்களுடன் வருவதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை என்றால், செயல்முறைக்குப் பிறகு நீங்கள் வீட்டுக்குச் செல்ல முடியாமலிருக்கலாம்.
- உணர்ச்சி உள்ளடக்கம், உங்கள் கால்களை நிலை தடுமாற வைக்கலாம். படிகளில், தயவுசெய்து கவனமாக இருங்கள், நீங்கள் நிலை தடுமாறுவதுபோல் உணர்ந்தால், உங்களுடன் யாராவது இருக்கும்படி செய்யுங்கள்.

- உங்கள் சிகிச்சைக்குப் பின் 24 மணிநேரம்வரை உங்கள் முடிவெடுக்கும் தகுதி பாதிக்கப் படலாம், அதனால் அந்த சமயத்தில் நீங்கள் எந்த முக்கியமான முடிவுகளும் எடுக்கக்கூடாது. சமூக ஊடகங்களைப் பயன்படுத்தினால், சாக்கிரதையாக இருங்கள்.
- 24 மணி நேரங்களுக்கு நீங்கள் பணிக்குத் திரும்பக்கூடாது, உங்களைச் சார்ந்திருப்போரைக் கவனித்துக்கொள்ளக்கூடாது, வண்டி ஓட்டக்கூடாது, சமைக்கக்கூடாது, அல்லது, எந்த இயந்திரத்தையும் இயக்கக்கூடாது. மருந்துகள் உங்கள் உடலில் இருந்து வெளியேற 24 மணி நேரம் ஆகலாம்.
- செயல்முறைக்குப் பிறகு 24 மணிநேரத்துக்கு நீங்கள் எந்தவிதமான மதுவோ அல்லது தூக்க மாத்திரைகளோ எடுத்துக்கொள்ளக்கூடாது.
- வீட்டில் பின்பற்றவேண்டிய கூடுதல் சிகிச்சையைப் பற்றிய அறிவுறுத்தல்களை உங்கள் மருத்துவர் எழுதிக் கொடுப்பார்.
- நீங்கள் வீட்டில் நன்றாக உணரவில்லை என்றால், அழைப்பதற்காக ஒரு தொடர்புத் தொலைபேசி எண்ணை மருத்துவமனை உங்களுக்கு கொடுக்கும்.
- சிகிச்சைக்குப் பிறகு, உங்களுக்குக் கவலையாக இருந்தால், உடல் நலமற்று உணர்ந்தால், அல்லது இந்த எண்ணைக் கண்டறிய முடியவில்லை என்றால், நீங்கள் உங்களுடைய பொது மருத்துவரை அழைக்கலாம், 111-ஐ அழைக்கலாம், அல்லது தேவைப்பட்டால், வயது வந்த திறனுள்ள ஒருவரை அழைத்துக் கொண்டு உங்கள் உள்ளூர் விபத்து மற்றும் நெருக்கடிநேரத் துறைக்குச் செல்லலாம்.

## மயக்கமருந்து நிபுணரிடம் நீங்கள் கேட்க விரும்பக்கூடிய கேள்விகள்

1 எனக்கு உணர்ச்சி உள்ளடக்கத்தை யார் கொடுப்பார்கள்?

2 நீங்கள் பரிந்துரைப்பது உணர்ச்சி உள்ளடக்கமா அல்லது ஒரு பொது உணர்ச்சிநீக்கியா?

3 எனக்கு ஏதேனும் குறிப்பிட்ட ஆபத்துகள் உள்ளனவா?

4 எனது உணர்ச்சி உள்ளடக்கத்திற்கு முன்னால் நான் எப்போது சாப்பிடுவதையும் பருகுவதையும் நிறுத்தவேண்டும்?

5 என்னை எந்நேரத்திற்கு அழைத்துச் செல்லும்படி நான் ஏற்பாடு செய்ய வேண்டும்?

## பக்க விளைவுகள், சிக்கல்கள் மற்றும் ஆபத்துகள்

நவீன மயக்க மருந்தில், தீவிரப் பிரச்சனைகள் பொதுவாக இருப்பதில்லை. ஆபத்தை முழுமையாக நீக்க முடியாது, ஆனால், நவீன மருந்துகள், கருவிகள் மற்றும் பயிற்சிகள், சமீபத்திய ஆண்டுகளில் மயக்கமருந்தை ஒரு அதிக பாதுகாப்பான செயல்முறையாக ஆக்கியுள்ளது.

இந்தப் பகுதியில் விளக்கப்பட்டுள்ள ஆபத்துகள் அனைத்தையும் தவிர்ப்பதற்காக, மயக்கமருந்து நிபுணர்கள், மிகுந்த அக்கறையுடன் செயல்படுகிறார்கள். உங்கள் மயக்கமருந்து நிபுணரால், இந்த ஆபத்துகள் எல்லாவற்றையும் பற்றிய கூடுதல் தகவல்கள் மற்றும் அவற்றைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் முன்னெச்சரிக்கைகளைப் பற்றிப் பேச முடியும்.

சொற்கள் மற்றும் எண்களின் உட்பொருளை புரிந்து கொள்வதில் மக்கள் வேறுபடுகிறார்கள். இந்த அளவுகோல், உதவுவதற்காகக் கொடுக்கப் பட்டிருக்கிறது.




| 10ல் 1 | 100ல் 1 | 1,000ல் 1 | 10,000ல் 1 | 100,000ல் 1 |
|---|---|---|---|---|
| உங்கள் குடும்பத்தில் ஒரு நபர் | ஒரு தெருவில் ஒரு நபர் | ஒரு கிராமத்தில் ஒரு நபர் | ஒரு சிறிய நகரத்தில் ஒரு நபர் | ஒரு பெரிய நகரத்தில் ஒரு நபர் |

கல்லூரி இணையத் தளத்தில் உள்ள நோயாளித் தகவல் பக்கங்களிலிருந்தும் நீங்கள் கூடுதல் தகவல்களைப் பெறலாம்: www.rcoa.ac.uk/patientinfo

## கூடுதல் வள ஆதாரங்கள்

- பொது உணர்ச்சிநீக்கி அல்லது உணர்ச்சி உள்ளடக்கம் பெற்ற ஒருவரை அக்கறையுடன் கவனித்துக்கொள்ளுதல் (www.rcoa.ac.uk/patientinfo/sedation)
- பல் பராமரிப்பு முன்னேற்பாட்டில், விழிப்புணர்வுள்ள உணர்ச்சி உள்ளடக்கத்திற்கான தர நிலைகள். The Royal College of Surgeons of England and Royal College of Anaesthetists. *RCoA* 2015 (http://bit.ly/2T2mZh6).
- உணர்ச்சி உள்ளடக்கம் சேவைகள் முன்னேற்பாடு பற்றிய வழிகாட்டுதல். *RCoA* 2016 (www.rcoa.ac.uk/gpas).
- உடல்நலப் பராமரிப்புச் செயல்முறைகளுக்குப் பாதுகாப்பான உணர்ச்சி உள்ளடக்க பழக்கங்கள்: தரநிலைகள் மற்றும் வழிகாட்டுதல். Academy of Medical Royal Colleges. *AoMRC* 2013 (http://bit.ly/301ndq8).

கூடுதல் தகவல்களை அளிக்கும் துண்டுப் பிரசுரங்களை நீங்கள் கல்லூரி இணையத் தளத்தில் காணலாம் www.rcoa.ac.uk/patientinfo. உங்கள் மருத்துவமனையின் மயக்க மருந்தளிக்கும் துறை அல்லது முன் மதிப்பீட்டு மருந்தகத்திலும் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் கிடைக்கலாம்.

## உங்கள் மயக்கமருந்துடன் தொடர்புடைய ஆபத்துகள்

**மயக்க மருந்தளித்த அல்லது மயக்க மருந்தளிக்கும் செயல்முறையைப் பெறுவதுடன் தொடர்புடைய குறிப்பிட்ட ஆபத்துகளைப்பற்றிய துண்டுப் பிரசுரங்கள் கல்லூரி இணையத் தளம் வழியாகவும் கிடைக்கின்றன:** www.rcoa.ac.uk/patientinfo/risks/risk-leaflets. **மேலே பட்டியலிடப்பட்டுள்ள நோயாளித் தகவல் துண்டுப் பிரசுரங்களுடன் இணைந்து இவை தகவல்களை வழங்குகின்றன.**

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொருப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எங்களிடம் சொல்லுங்கள்

இந்த துண்டுப்பிரசுரத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

நீங்கள் கூற விரும்பும் கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், அவைகளை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள் patientinformation@rcoa.ac.uk

**மயக்க மருந்து நிபுணர்களின் ராயல் கல்லூரி (Royal College of Anaesthetists)**
Churchill House, 35 Red Lion Square, London WC1R 4SG
020 7092 1500

## www.rcoa.ac.uk

### முதல் பதிப்பு 2018

இந்தத் துண்டுப்பிரசுரம், பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மறுபரிசீலனை செய்யப்படும்.

**© 2018 Royal College of Anaesthetists**
நோயாளி தகவல் பொருட்கள் தயாரிப்பதற்காக, இந்தத் துண்டுப்பிரசுரம் நகல் எடுக்கப்படலாம். தயவுசெய்து, இந்த உண்மை மூலத்தை மேற்கோள் காட்டுங்கள். இந்த துண்டுப்பிரசுரத்தின் ஒரு பகுதியை நீங்கள் மற்றொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், பொருத்தமான ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் மற்றும் லோகோக்கள், பிராண்டிங் மற்றும் படங்கள் அகற்றப்பட வேண்டும். இன்னமும் அதிக தகவலுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.